(வலைப்பின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தச்) சட்டம்

---

*(1999 ஒற்றோபர் மாதம் 07ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தச்) சட்டம்**

[1999 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.–ஓ.54/98.

## 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், கடிதத் தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "சமூகப் பாதுகாப்புச் சபை" என்ற சொல்லமைப்பு காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "இலங்கைச் சமூகப் பாதகாப்புச் சபை" என்ற சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தையும் எனைய எழுத்திலான சட்டத்தையும் பொதுவாகத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப் படுகின்றது : -

முதன்மைச்சட்ட வாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" (2) அமைச்சரானவர் பணிப்பாளர்களுள் ஒருவரை சபைத் தவிசாளராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், சபையின் தொழிற்பாட்டுப் பணிப்பாளராக இருக்கவென இன்னொரு பணிப்பாளரையும் நியமிக்கலாம்."

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றத :–

முதன்மைச்சட்ட வாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

“ 4. இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, சபையின் பணிகளானவை, கடற்றொழில் மற்றும் கமத்தொழிற்றுறைகளில் சுயதொழிலிலுள்ளவர்களைத் தவிர்ந்த ஆட்களுக்கு (இதனகத்துப்பின்னர் “ திட்டம் ” எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) ஓர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டத்தைத் தாபித்தலும், பின்வரும் குறிக்கோள்களை மனதிற்கொண்டு அத்தகைய திட்டத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் என்பனவாகவிருத்தல் வேண்டும்.:-

(அ) சுயதொழிலிலுள்ள ஆட்கள் முதுமையடையும் போதும் இயலாதோராவதன்மீதும் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குதல்;

(ஆ) சுயதொழிலிலுள்ள ஆட்கள் இறப்பதன்மீது அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணம் வழங்குதல் ;

(இ) சுயதொழிலிலுள்ள ஆட்கள் அவர்களது அந்தந்த தான்புரி தொழில்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் அவர்களது திறமைகளையும் நுட்பங்களையும் விருத்திசெய்வதற்கும் அவர்களுக்கு ஊக்கமளித்தல் ;

(ஈ) சுயதொழிலில் இருப்பதற்கும் அவர்களின் திறமைகளையும் நுட்பங்களையும் விருத்தி செய்வதற்கும் இளமாட்களுக்கு ஊக்கமளித்தல்;

(உ) சிக்கனம் மற்றும் மூலவள முகாமை என்பனவற்றின் நன்மைகள் பற்றி சுயதொழிலிலுள்ளவர்களுக்கு அறிவு புகட்டுதல் ; அத்துடன்

(ஊ) பொதுவாகச் சுயதொழிலிலுள்ள ஆட்களின் வாழ்க்கைத் தரங்களைச் சீராக்குதல்.”

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 5 ஆம் பிரிவைத்திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

" (உஊ) சபையின் பணிகளையொத்த பணிகளை நிறைவேற்றுகின்ற அரச நிறுவனங்களுடன் அல்லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புகளுடன் உடனுழைத்தல் ;"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 6 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

தொழினுட்ப மதியுரைக் குழு.

6 அ. (1) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) தொழினுட்ப மதியுரைக் குழுவொன்றை அமைச்சர் நியமித்தல் வேண்டும் ; அமைச்சரின் அபிப்பிராயத்தில், சமூகப் பாதுகாப்பு, சமூகச் சேமநலன், காப்புறுதி, தொகைக்கணிப்பு மதிப்பீடு, நிருவாகம், நிதி அல்லது முகாமை என்ற துறைகளில் அனுபவம் பெற்றுள்ள அல்லது திறமை காட்டியுள்ள ஆட்களிடையேயிருந்து ஒன்பது பேருக்கு அதிகமாகவிராத ஆட்களை இது கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபைத் தவிசாளரே குழுவின் தவிசாளராக விருத்தல் வேண்டும்.

(3) குழுவின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) சபையினால் அதற்குக் காலத்துக்குக்காலம் ஆற்றுப்படுத்தப்படக்கூடியவாறாக, திட்டத்தின் நிருவாகம் மற்றும் முகாமை என்பன தொடர்பான அத்தகைய கருமங்கள் பற்றிச் சபைக்கு மதியுரை வழங்குதல் ;

(ஆ) எந்தக் குறிக்கோள்களை எய்துமுகமாகத் திட்டமானது நிருவகிக்கப்பட்டு முகாமை செய்யப்படுகின்றதோ அந்தக் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமென அல்லது உகந்ததெனக் குழுவானது கருதுகின்ற ஏதேனும் கருமம் பற்றிச் சபைக்கு மதியுரை வழங்குதல் ; அத்துடன்

(இ) சபையினால் விதிகள் ஆக்கப்படுவது தொடர்பாகச் சபைக்கு மதியுரை வழங்குதல்.

(4) அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் சபை நிதியத்திலிருந்து குழுவுறுப்பினர்களுக்குச் செலுத்தப்படலாம்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத்திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உதவு தொகை செலுத்துநர் ஒருவர் அறுபது வயதையடைவதன் மீது ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக "உதவுதொகை செலுத்துநர் ஒருவர், (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அறுபது வயதையடைவதன் மீது ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) உளரீதியாகப் பின்தங்கியவராகவுள்ளவரும், முப்பத்தைந்து வயதையடையுமுன்னர் நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தத் தொடங்கியுள்ளவருமென மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலாலரொருவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டவரான உதவு தொகை செலுத்துநரொருவர் நாற்பது வயதையடைந்ததன் மேல் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத்திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, "அவரது உயிர்வாழும் வாழ்க்கைத்துணைக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "சபையில் வைப்பிலிடப்பட்டு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருக்கக் கூடியவரான அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு , அத்துடன் அத்தகைய பெயர் நியமனத்துக்குப் பதிலாக, அவரது உயிர்வாழும் வாழ்க்கைத்துணைக்கும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்ட வாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(இஇ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் சபைக்குக் கைமாற்றப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;" அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(4) சபையின் தொடக்க மூலதனம் பத்துக் கோடி ரூபாவாக இருத்தல் வேண்டும் ; ஒதுக்கீட்டுச் சட்டமொன்றினால் அல்லது பாராளுமன்றத் தீர்மானமொன்றினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினால் இது காலத்துக்குக்காலம் அதிகரிக்கப்படலாம். அத்தகைய மூலதனத் தொகையானது அமைச்சரின் கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைப் பணங்களின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகைகள் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(5) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் சபையானது உள்ளடக்கப்பட்டதிலிருந்தும் அதன் பின்னரும் சபையின் இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்."

*முதன்மைச் சட்ட வாக்கத்தில் 28 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 28 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :–

*“பணிப்புகளை விடுப்பதற்கு அமைச்சருக் குள்ள தத்துவம்.*

28 அ. (1) சபையின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும் பற்றி அமைச்சர் பொதுவான பணிப்புகளைச் சபைக்கு விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் பயன்கொடுத்தல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

(2) எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக சபையின் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பிலான அத்தகைய தகவலை அமைச்சர் தமக்குக் கொடுத்துதவும்படி அத்தகைய எழுத்தில் சபையைப் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் பயன் கொடுப்பது சபையின் கடமையாதலும் வேண்டும்.”

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*